வீடியோ கமரா,
T.V. வீடியோ டெக்
ஆகியவற்றை
உத்தரவாதத்துடன்
உடனுக்குடன்
திருத்திக் கொள்வதற்கு

எவர்விஷன்
21, மணிக்கூட்டு வீதி
யாழ்ப்பாணம்

பக்கங்கள் நான்கு

Registered as a Newspaper

உதயன்

விலை ரூபா 5-00

சுடர்: 9 திருவள்ளுவர் ஆண்டு 2025 வைகாசி 04 புதன்கிழமை (18 - 5 - 1994) UTHAYAN A Lively National Tamil Daily ஒளி 171

[illegible]
நவீன முறையில் வீடியோ
படப்பிடிப்பிற்கு

எவர்விஷன்
21, மணிக்கூட்டு வீதி
யாழ்ப்பாணம்

ஸ்ரீலங்கா கடற்படைக்கு எதிராக நாளை தமிழகத்தில் ஆர்ப்பாட்டம்!

காயமுற்ற நான்கு மீனவர்கள் மூன்று தினங்களின் பின் மீட்பு

சென்னை, மே 18

பாக்குநீரிணைக் கடற் பரப்பில் ஸ்ரீலங்கா கடற்படையினரால் இந்திய மீனவர்கள் தொடர்ந்து தாக்கப்பட்டு வருவதைக் கண்டித்து தமிழகம் எங்கும் நாளை ஆர்ப்பாட்டப் பேரணிகளை நடத்தத் திட்டமிடப்பட்டிருப்பதாக அறிவிக்கப்படுகிறது;

இதற்கிடையில் —

கடந்த வெள்ளிக்கிழமை கோடிக்கரை கடற்பகுதியில் ஸ்ரீலங்கா கடற் படையினரின் தாக்குதலுக்கு இலக்கான பின்னர் காணாமற் போனதாகக் கருதப்பட்ட எட்டு தமிழக மீனவர்களில் நால்வர் மூன்று தினங்களின் பின்னர் நேற்று முன்தினம் மிதந்து வந்த படகு ஒன்றிலிருந்து மீட்கப்பட்டனர் என்று அறிவிக்கப்படுகிறது.

ஏற்கனவே கடந்த வெள்ளியன்று நடந்த தாக்குதல் சம்பவத்தில் சிக்கிய நாகை — காயிதே மில்லத் மாவட்டத்தைச் சேர்ந்த எட்டு மீனவர்களில் ஒருவர் உடனடியாக மீட்கப்பட்டதும் —

ஏனைய ஏழு பேரில் நால்வர் சூட்டுக் காயங்களுடன் நேற்று முன்தினம் மீட்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

எஞ்சிய மூன்று மீனவர்களுக்கும் என்ன நடந்தது என்பது தெரியாமல் இருப்பது

(3 ஆம் பக்கம் பார்க்க)

தேர்தல் சட்டத்தில் திருத்தம் செய்து

தேசிய பட்டியல் எம்.பியை அகற்ற வழி செய்ய வேண்டும்

சபாநாயகர் முகம்மது யோசனை

கொழும்பு, மே. 18

தேசியப்பட்டியல் மூலம் எம். பிக்களை நியமிக்கும் தேர்தல் சட்டத்தில் திருத்தம் செய்யப்படவேண்டும் என்று நாடாளுமன்ற சபாநாயகர் அல்ஹாஜ் எம். எச். முகம்மது யோசனை தெரிவித்திருக்கிறார்.

தேசியப்பட்டியல் மூலம் எம். பிக்களை நியமிக்கும் ஓர் அரசியல் கட்சியினால் குறிப்பிடப்பட்ட எம். பியை பதவியில் இருந்து அகற்றக் கூடியதாக சட்டத்தில் திருத்தம் செய்யப்படவேண்டும் என்றும் சபாநாயகர் கூறியுள்ளார்.

சம்பந்தப்பட்ட கட்சி தீர்மானம் ஒன்றை நிறைவேற்றுவதன் மூலம் நியமன எம். பி களை அகற்றக்கூடியதாக அச் சட்டத்திருத்தம் இருக்க வேண்டும் என்று அவர் கருத்து வெளியிட்டிருக்கிறார்.

கொழும்பில் நடந்த வைபவம் ஒன்றில் பேசுகையில்

[3 ஆம் பக்கம் பார்க்க]

கிளி, முல்லை, மன்னாருக்கு மின் வழங்க ஆலோசனை

வடமாகாணத்துக்கு மின்சாரம் வழங்குவது குறித்து அரச மட்டத்தில் ஆலோசிக்கப் படுவதாக கொழும்புத் தகவல்கள் தெரிவித்தன.

முதல் கட்டமாக மன்னாருக்கும் —

இரண்டாம் கட்டமாக கிளிநொச்சி, முல்லைத்தீவுப் பகுதிகளுக்கும் —

மின் விநியோகம் மேற்கொள்வது குறித்து அரசத் தரப்பில் ஆலோசனை நடத்தி வருவதாகத் தெரியவருகிறது.

இதற்கு முன்னோடியாக வடக்கில் இருந்து வவுனியாவுக்கு இடமாற்றம் செய்யப்பட்ட மின்சார சபை ஊழியர்கள் மீண்டும் வடக்கிற்கு அனுப்பப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது

(உ-8)

இன்று கிளாலி படகுச் சேவை

யாழ்ப்பாணம், மே 18

கிளாலி — பூநகரிப் படகுச் சேவை இன்று புதன் கிழமைவழமையான நேரத்தில் நடைபெறும் என விடுதலைப் புலிகளின் அரசியல்துறையினர் அறிவித்துள்ளனர்.

(க-5)

லட்சிய பற்றுள்ளவர்களாக விடுதலைப்புலிகள் உள்ளனர்

அமெ. வெளிவிவகார அமைச்சு அறிக்கை

யாழ்ப்பாணம், மே 18

''தமிழீழம் நிறுவும் லட்சிய பற்றுடையவர்களாக தமிழீழ விடுதலைப் புலிகள் காணப்படுகின்றார்கள்''

—அமெரிக்க வெளிவிவகார அமைச்சின் அறிக்கை ஒன்றில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

சர்வதேச ஸ்தாபனங்கள் வெளிநாட்டு அரசாங்கங்கள், ஐ. நா. சபை ஆகியவற்றில் தமிழீழ விடுதலைப் போரின் விளைவுகளைத் தெளிவாக்குவதன் மூலம் தமது லட்சியத்துக்கு ஆதரவை விடுதலைப் புலிகள் உருவாக்கி வருகின்றனர்,

உலகத் தமிழர் சங்கம் உலகத் தமிழர் இயக்கம், கனேடிய தமிழர் சங்கங்கள் மூலம் உலகெங்கும் வாழும் தமிழர்கள் விடுதலைப் புலிகளின் போராட்டத்தை வெளிப்படையாக ஆதரிக்கின்றனர்

(3 ஆம் பக்கம் பார்க்க)

லக்கி அல்கம தலைமையில்

5ராணுவ அதிகாரிகள் சீனாவுக்கு விஜயம்

போர்த் தளபாடங்களை பார்வையிட

கொழும்பு, மே 18

இலங்கை இராணுவத் தலைமை நிர்வாக அதிகாரியான மேஜர் ஜெனரல் லக்கி அல்கம தலைமையில் இராணுவ அதிகாரிகள் குழு ஒன்று சீனா சென்றிருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

இலங்கை இராணுவத்தினால் கொள்முதல் செய்யப்படவுள்ள போர்த்தளபாடங்களைப் பார்வையிடுவதற்காகச் சென்றுள்ள இந்தக் குழுவில் 5 இராணுவ அதிகாரிகள் இடம்பெற்றுள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இம்மாத இறுதியில் இராணுவக் குழு நாடு திரும்பும் என்று தெரிவிக்கப்படுகிறது.

(ஓ-எ)

முச்சந்தி முனி



உந்தத் தியாகத்தைச் செய்யிறதுக்கு எட்டுக் கோடி குடுத்திருப்பினமோ...!

ஹெலித் தாக்குதல்

வல்லைவெளி மற்றும் வளலாய், தொண்டமானாறுப் பகுதிகளில் நேற்றுக் காலை ஹெலி தாக்குதலை மேற்கொண்டது இதனால் வல்லை வெளியில் சிறிதுநேரம் பிரயாணிகள் பதற்றம் அடைந்தனர்.

தாழப்பறந்து வந்த ஹெலி தாக்குதல் நடத்தியபோதும் இழப்புகள் ஏற்பட்டதாகத் தெரியவரவில்லை.

(ஓ-155)

காமினி திஸநாயக்கா, ரொனி டி மெல் உட்பட

4 புதிய எம். பிக்களை நியமிக்கும் விஜேதுங்காவின் முயற்சி தோல்வி

ஒருவர் மட்டுமே ராஜினாமாச் செய்ய இணக்கம்

கொழும்பு, மே 18

ஐக்கிய தேசியக் கட்சியின் தேசியப்பட்டியல் எம். பிக்களில் ஆகக் குறைந்தது நால்வரைப் பதவி விலகச் செய்து அந்த இடங்களுக்கு தமக்கு வேண்டியவர்களை எம். பிக்களாக நியமிப்பதற்கு ஜனாதிபதி டி.பி.விஜேதுங்கா நேற்று முன்தினம் பிற்பகல் எடுத்த முயற்சி தோல்வியில் முடிந்ததாக அறிவிக்கப்படுகிறது.

தேசியப்பட்டியல் எம். பிக்களாக காவிங்க ஒபேவன்ஸ, ஆர். ஏ ஜி சிரிசேன, எ. எச். அமிட், அலெக் றொபர்ட்ஸன், ஜெனோட்பெரேரா மற்றும் ரூபா கிறிபானி டானியல் ஆகியோரை ஜனாதிபதி விஜேதுங்கா தமது அலுவலகத்துக்கு அழைத்து பேச்சுவார்த்தைகள் நடத்தினார்.

அப்போது நியமன எம்.பிக்களிடம் ஜனாதிபதி கோரிக்கை ஒன்றை விடுத்தார்.

காமினிதிஸநாயகா, றொனி டி மெல், காமினி ஜெயவிக்ரம பெரேரா ஆகியோரையும் பிரபல சட்டத்தரணியான ரஞ்சித் அபேசூரியாவையும் எம். பிக்களாக்கி கட்சியின் விசுவாசத்தன்மையை உறுதிப்படுத்திக் கொள்ள தாம் விரும்புவதாக ஜனாதிபதி, இந்த எம்பிக்களிடம் தெரிவித்தார். தமது இம்முயற்சிக்கு இடமளிக்கு முகமாக

(3 ஆம் பக்கம் பார்க்க)

மேலும் 2,000 பரல் தார் வடக்கே அனுப்ப இணக்கம்

யாழ்ப்பாணம், மே 17

யாழ். மாவட்ட வீதிகளைத் திருத்த மேலும் ஒரு தொகுதி தார் பரல்களை வழங்க பாதுகாப்பு இணைப்புக்குழு இணக்கம் தெரிவித்துள்ளது.

நேற்று முன்தினம் வந்து சேர்ந்த ''றுகுணு'' கப்பலில் 800 பரல் தார் எடுத்துவரப்பட்டிருந்தது.

மேலும் 2 ஆயிரம் பரல் தார் தேவையென அரச அதிபர் விடுத்த கோரிக்கை தொடர்பாக, பாதுகாப்பு இணைப்புக்குழு அரச அதிபருக்கு நேற்று அனுப்பிய பதிலில் —

அடுத்த தடவை அரச அதிபர் கொழும்பு வரும் சமயம் அதற்கான அனுமதி வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(உ-3)

கடலில் கப்பல் தரிப்பு!

வடமராட்சிக் கிழக்குக் கடல் பிரதேசத்தில் வெற்றிலைக்கேணி இராணுவ முகாமிற்கு நேரே யுத்தக் கப்பல் ஒன்று தரித்து நிற்பதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

தினமும் காலை வேளைகளில் கரையை நோக்கிவரும் அந்தக் கப்பல் மாலை நடுக்கடலுக்குத் திரும்பிச் சென்று விடுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

அந்தக் கப்பலில் இருந்து இராணுவத் தளபாடங்கள் இறக்கப்படலாம் என்று கருதப்படுகிறது.

(ஓ-117)

இரு நேரப் பாடசாலை திட்டம் ஒரு தலைப்பட்சமாக அமுல்!

யாழ். இந்துக் கல்லூரி பெற்றோர்கள் கண்டனம்

யாழ்ப்பாணம், மே 18

யாழ். குடாநாட்டு பாடசாலைகளை இரு நேரமாக இயங்க வைப்பதற்கு எடுக்கப்பட்ட முடிவு ஒருதலைப்பட்சமாக மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. இப்பிரச்சினையில் சம்பந்தப்பட்ட மாணவர்களின் பெற்றோர்களையோ, ஆசிரிய சமூகத்தையோ அல்லது அதிபர்களையோ, அல்லது ஆசிரிய சங்கங்களின் பிரதிநிதிகளையோ கலந்தாலோசிக்காது — நடைமுறைச் சிக்கல்களைப் பற்றி சிந்திக்காது — கல்வித் துறையின் மேல்மட்ட நிர்வாகிகள் மட்டும் தம்பாட்டில் கூடி எடுத்துள்ள இந்த முடிவை கடுமையாகக் கண்டிக்கிறோம்.

—இவ்வாறு யாழ். இந்துக் கல்லூரி பாடசாலை அபிவிருத்திச் சங்கம், அபிவிருத்திச் சபை ஆகியவை ஒன்றாகக் கூடி நடத்திய கூட்டத்தில் ஏகமனதாகக் கருத்துத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

யாழ்ப்பாணத்தில் உள்ள தேசிய கல்லூரிகளில் யாழ். இந்துக் கல்லூரியும் ஒன்று. அக்கல்லூரியின் மேற்படி இரு சபைகளும் நேற்று மாலை கல்லூரி அதிபர் திரு. அ. பஞ்சலிங்கம் தலைமையில் கூடிக் கல்லூரியை இரு நேரப் பாடசாலையாக இயங்க வைப்பது குறித்து ஆராய்ந்தன.

கல்லூரியை இரு நேரமாக இயங்க வைக்கும்படி கல்விப் பணிப்பாளரால் தமக்கு அனுப்பி வைக்கப்பட்ட உத்

[3 ஆம் பக்கம் பார்க்க]

வடமராட்சிக் கடலில் நேற்று கடற்படையினர் பீரங்கி தாக்கு

குடிமனைகளில் இருந்த 2 பெண்கள் படுகாயம்

வல்வெட்டித்துறை, மே 18

வல்வெட்டித்துறை தொண்டமானாறு கடல் பகுதியில் ஸ்ரீலங்கா கடற்படையினர் நேற்று நடத்திய பீரங்கித் தாக்குதல்களினால் திண்ணையில் இருந்த இரு பெண்கள் படுகாயமடைந்தனர்.

நேற்றுக் காலை சுமார் 5.45 மணியளவில் வெற்றிலைக் கேணியிலிருந்து [illegible] சென்துறை நோக்கிச் சென்று கொண்டிருந்த [illegible] கடற்படையினரே சரமாரியான தாக்குதல்களை நடத்தினர்

இத்தாக்குதல்களினால் கடல் பகுதியில் மீன் பிடித்துக் கொண்டிருந்த மீனவர்கள் தமது மீன் பிடி உபகரணங்களை கைவிட்டு விட்டு பதற்றத்துடன் கரை சேர்ந்தனர்.

பீரங்கிக் குண்டுத் தாக்குதல்களினால் வல்வெட்டித்துறை [illegible] சேர்ந்த இரு பிள்ளைகளின் தாயான [illegible] ரதி (28 வயது) என்பவர் திண்ணையிலிருக்கும்போது காயமடைந்தார். இவரது குடிசையை பிய்த்துக்கொண்டு வந்த குண்டு இவரது நெஞ்சுப் பகுதியை மோசமாகத் தாக்கிச் சிதைத்தது இவரது கணவர் 1991 ஆம் ஆண்டில் கடலில் மீன்பிடிக்கச் சென்றபோது கடற்படையினரால் சுடப்பட்டு மரணமானார் என்பது குறிப்பிடத்தக்கது.

தொண்டமானாற்றைச் சேர்ந்த இராசலிங்கம் லீலா

(3 ஆம் பக்கம் பார்க்க)

பாங்கொக் செல்கிறார் யாழ். செயலக அதிகாரி

யாழ்ப்பாணம், மே 18

''அனர்த்தங்களின்போதான முகாமைத்துவம்'' என்ற தலைப்பிலான பயிற்சி கலந்துரையாடல் ஒன்று எதிர்வரும் ஜூன் 6 ஆம் திகதி முதல் ஜூலை 15 ஆம் திகதி வரை தாய்லாந்து தலைநகர் பாங்கொக்கில் உள்ள ஆசிய அபிவிருத்தி தொழில்நுட்ப நிறுவனத்தில் நடைபெறவிருக்கிறது.

உலக வங்கியின் உதவியுடன் நடைபெறும் இக்கலந்துரையாடலில் சமூக சேவைகள் அமைச்சின் சார்பில் சிரேஷ்ட உதவிச் செயலாளர் திரு.

[3 ஆம் பக்கம் பார்க்க]

எம், பி. பதவியிலிருந்து விலக மலேஇன பிரதிநிதி இணக்கம்

கொழும்பு மே 18

ஐக்கிய தேசியக் கட்சியின் தேசியப் பட்டியல் எம் பியான எம்.எச். அமிட் தமது ராஜினாமாவைச் சமர்ப்பித்துள்ளார்.

அவர் தமது ராஜினாமா கடிதத்தை ஜனாதிபதியிடம் நேற்று கையளித்தார். அது இன்று தேர்தல் ஆணையாளருக்கு அனுப்பப்படும் என எதிர்பார்க்கப் படுகிறது

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் டாக்டர் எம் சி.எம். கலீல், கட்சியின் பொதுச் செயலாளர் டாக்டர் காமினி விஜேசேகரா, இலங்கை மலே சங்கத்தின் தலைவர் பி. எம். என். ஜுரம்பதி ஆகியோர் அச்சமயம் அங்கு சமுகமளித்திருந்தனர்.

மலே இனப் பிரதிநிதி ஒருவருக்கு நாடாளுமன்றத்தில் இடமளிக்கும் வகையில் ஜனாதிபதி பிரேமதாஸா ஐ தே. கவின் தேசியப் பட்டியல் மூலம் அமிட்டுக்கு எம். பி. பதவி வழங்கியிருந்தார்.

பதவி விலகும் அமிட் இன்று நாடாளுமன்றத்தில் விசேட அறிக்கை ஒன்றை வெளியிடுவார் எனறும் தெரிவிக்கப் பட்டது.

(உ-எ-5-6)

ஜனாப் அமிட் செய்தது உன்னத தியாகமாம்!

ஜனாதிபதி டி. பி. புகழாரம்

கொழும்பு மே 18

தமது எம். பி. பதவியை இராஜினாமாச் செய்ய முன்வந்திருக்கும் அமிட், கட்சிக்காகவும் நாட்டுக்காகவும் மாபெரும், உன்னத தியாகத்தைச் செய்துள்ளார் என ஜனாதிபதி விஜேதுங்கா கூறியதாக இலங்கை வானொலி அறிவித்தது.

ஜனாப் அமிட் ஐ. தே. கவின் ஸ்தாபக உறுப்பினர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

திறமையாகப் பணிபுரியக் கூடிய ஒருவர் எம். பியாவதற்காக தமது பதவியைத் தியாகஞ் செய்வதாக ஜனாப் அமிட் தெரிவித்தார்.

(உ-எ-5-6)

காமினி எம். பியாக நாளை பதவியேற்பு?

கொழும்பு. மே 18

ஐ.தே க. தேசியப்பட்டியல் எம் பியான அமிட்டின் இராஜினாமாக் கடிதம் தேர்தல் ஆணையாளருக்கு இன்று கிடைத்ததும் —

அவரது இடத்துக்கு காமினி திஸநாயக்கா நியமிக்கப் படுவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

அனேகமாக நாளை காலை நாடாளுமன்றம் கூடும் போது காமினி திஸநாயக்கா பதவியேற்பார் என்றும் —

அந்தக் கையோடு ஜனாதிபதி விஜேதுங்காவினால் அவர் அமைச்சராக நியமிக்கப்படுவார் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

(உ-எ-5-6)

ஹேமாவுக்கும் மகனுக்கும் எம், பி, பதவி கிடையாது

கொழும்பு. மே 18

முன்னாள் ஜனாதிபதி பிரேமதாஸாவின் மனைவி ஹேமா, புதல்வன் சஜித் ஆகியோருக்கு எம் பி. பதவிகளை வழங்கும் விஷயத்தில் ஜனாதிபதி விஜேதுங்கா ஆர்வம் காட்டவில்லை என்பது இப்போது தெரிய வந்துள்ளது.

ஐ. தே. க. தேசியப்பட்டியலில் உள்ள ஆறு எம் பிக்களை ஜனாதிபதி நேற்று முன்தினம் சந்தித்துப் பேசியபோது —

காமினி திஸநாயகா, றொனி டி மெல், காமினி ஜெயவிக்ரம பெரேரா, ரஞ்சித் அபயசூரிய ஆகியோரை எம் பிக்களாக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டிருப்பதாக மட்டுமே தெரிவித்திருந்தமை இதற்கு ஆதாரமாக பி. பி. ஸியின் சிங்களச் சேவையில் சுட்டிக் காட்டப்பட்டது.

அச்சந்திப்பின் போது ஹேமா மற்றும் சஜித் ஆகியோரின் பெயர்களை எக்கட்டத்திலும் ஜனாதிபதி பிரஸ்தாபிக்கவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

(உ-எ-6)

நீர்கொழும்பு நீதிமன்ற அசம்பாவிதம்:

சொத்தி உபாலியை விசாரிக்க அனுமதி கேட்கிறார் எஸ். பி.

கொழும்பு, மே 18

நீர்கொழும்பு நீதிமன்றத்தில் அண்மையில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் தொடர்பாக சொத்தி உபாலியை விசாரிப்பதற்கு சிரேஷ்ட பொலீஸ் அதிபர் எடிஸன் குணதிலக நீதிமன்றத்தின் அனுமதியைக் கோரியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நீர் கொழும்பு நீதிமன்றத்தில் துப்பாக்கிச் சூட்டுச் சம்

(3 ஆம் பக்கம் பார்க்க)

சின்னஞ் சிறு விளம்பரம்

விற்பனைக்கு

பெரிய புத்தக அலுமாரி (Book Shelf) சிகை அலங்காரத்திற்குத் தேவையான உபகரணங்கள், பொருட்கள் (Cream Lotion) முதலியவை உடன் விற்பனைக்குண்டு. 71, நக்கா றோட், யாழ்ப்பாணம்.
(30927)

மட்டுவில் திருக்கணித நிலையத்திற்கு அருகாமையில் 5 பரப்புடன் அமைந்துள்ள கல்வீடு விற்பனைக்கு உண்டு. தொடர்பு: ஸ்ரீ விஷ்ணு முகவர் கோட்டடி சாவகச்சேரி.
(30891)

FOR SALE

Toefl Cassettes and Books Listening Comprehension, Structure and written Expression Vocabulary and Reading comprehension, Idioms, Grammar, Barons Basic Tips. 71, நக்காறோட், யாழ்ப்பாணம். (30928)

வெளிவந்துவிட்டது

ஆண்டு 8 சுற்றாடற்கல்வி செயல்நூல் விற்பனையாகிறது. தேசிய கல்வி நிறுவனத்தின் 1994 பாடத்திட்டத்திற்கமைய ஆக்கப்பெற்றது. ஆக்கம்: த. துரைசிங்கம், ஸ்ரீ சுப்பிரமணிய புத்தகசாலை, யாழ்ப்பாணம்.
(30901)

உழுந்து உடைத்தல்

விடாபாகிலேயே உங்களிடம் உள்ள உழுந்தை வந்து கையால் உடைத்து பருப்பாக்கி கொடுக்கப்படும். ஒரு கிலோவுக்கு கூலி ஒரு ரூபாய் மட்டும். விபரங்களுக்கு: பா. சதீஸ், 80, மார்க்கட் பாய்க்கடை, யாழ்ப்பாணம்.
(7380)

தேவை

சுன்னாகத்திலே இயங்கி வரும் ஒரு தேநீர்சாலைக்கு பரிமாறுவோர் தேவை. சுற்றாடலிலே இருப்பவர்கள் விரும்பத்தக்கது. விபரங்களுக்கு மே/பா 32, உதயன் சேவை நிலையம், 82, K K S. வீதி, சுன்னாகம். (7094)

Exercise Bicycle ஒன்று Head Phone ஒன்று றேடியோ சகிதம் ஒன்றும் தேவை. உங்கள் விலையையும் குறித்து எழுதுங்கள். முகவரி: சிவா, மே/பா, சுப்பிரமணியம், லைபிரேறியன், நீர்வேலி.
(7389)

இலகு திருமண சேவை

இந்து, வயது 29, ரோகிணி, உதயச் செவ்வாய், U. K விசா உடையவருக்கு மணப்பெண் தேவை. இலங்கையில் திருமணம் செய்யலாம். தொடர்பு: ஞாயிறு காலை, புதன் மாலை. த. விமலா, யாழ். நாச்சிமார் கோவிலடி.
(30931)

(O/L) MATHS

O/Lஇல் கட்டாய பாடமாகிய கணித பாடத்தில் இதுவரை சித்தியடையாதவர்களுக்கும், ஆரம்ப அறிவே இல்லாதவர்களுக்கும 27வருட அனுபவமுடைய ஆசிரியரினால் 40 மணித்தியாலங்களில் Distinction பெறுபேறடையக் கற்பிக்கப்படும். ஆறுமுகநாதன், 10, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, லோ/கேந்திரா வீதி, கண்டிக்குளி. (7387)

2 குழந்தைகள் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், மே 18

செப்ரிசீமியாவின் தாக்கத்தினால் யாழ். ஆஸ்பத்திரியில் நேற்று முன்தினமும் இரண்டு குழந்தைகள் உயிரிழந்தனர்.

அரியாலையைச் சேர்ந்த ரேவதியின் 10 நாள் குழந்தையும், யாழ். இராசசிங்கம் வீதியைச் சேர்ந்த செபமாலை சிலுவைராசா என்ற ஆறு மாதம் குழந்தையுமே மரணமாகின குழந்தைகள் ஆவர்.

மேயரிடம் விளக்கம் கேட்கிறார் டி. பி.

கொழும்பு, மே 18

தம்மிடமும் மத்திய மாகாண ஆளுநரிடமும் இருந்து முன் அனுமதி பெறாமல் வெளிநாடு சென்றதற்கு பதினைந்து தினங்களுக்குள் விளக்கமளிக்கும்படி மாத்தளை மாநகர மேயர் ரஞ்சித் அலுவிகாரைக்கு ஜனாதிபதி விஜேதுங்க உத்தரவிட்டுள்ளார்.

மேயரிடம் இருந்து குறிப்பிட்ட காலக்கெடுவினுள் விளக்கத்தைப்பெற்று அவரது அறிக்கையுடன் தமக்கு அனுப்பி வைக்கும்படி மத்திய மாகாண ஆளுநருக்கு ஜனாதிபதி அறிவித்துள்ளார்.

(ஒ–ஏ)

நடேஸ்வராக் கல்லூரி
மெய்வல்லுநர் போட்டி

காலம்: **19·05·94** வியாழக்கிழமை
பி. ப. 1-30மணி

இடம்: ஸ்கந்தவரோதயாக் கல்லூரி

பழைய மாணவர்கள், பெற்றோர்கள், நலன் விரும்பிகளை அன்புடன் அழைக்கிறோம்.

அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள்.

(சி/8166)

விடுதலைப் புலிகள்
கலை, பண்பாட்டுக் கழகம்
நடத்தும்
கரும்புலிகள் நாளையொட்டிய
அரங்க விழாவும், கிராமிய ஆட்ட கலை விழாவும்

05 - 07 - 1994 அன்று நடைபெறவிருக்கும் கரும்புலிகள் நாளையொட்டி விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழகம் மாவட்டங்கள் மட்டத்தில் நடத்தவிருக்கும் இப்போட்டிகளில் கலந்து கொள்ளும் அமைப்புக்கள், தனிநபர்களுக்கான விதிமுறைகளை கீழே வகைப்படுத்தித் தருகின்றோம்.

சகல போட்டிகளுக்குமான விண்ணப்பங்களும், கோட்ட மட்டத்திலான விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழக செயலகங்களில் 02 - 06 - 1994 க்கு முன்னதாக நேரில் கையளிக்கப்பட வேண்டும்.

அரங்க வகைகளும் போட்டி விதிமுறைகளும்

1. பாரம்பரிய அரங்க முறைமைகளை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்படும் நாடகங்கள். உதாரணமாக கூத்து, இசைநாடகம், வரலாற்று நாடகம், இலக்கிய நாடக வடிவங்களைக் கொண்டவையாக இவை அமையும்.
2. நவீன அரங்க முறைமைகளை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்படும் நாடகங்கள். உதாரணமாக இயல்புநெறிவாதம், யதார்த்தவாதம், மோடிமை, குறியீட்டுத்தன்மை கொண்டவையாக இவை அமையும்.

பொது அறிவுறுத்தல்கள்

1. கலை வடிவங்களின் கருப்பொருள் சமகாலப் பிரச்சினைகள், நிகழ்வுகளை யொட்டியதாகவும், கலையம்சம் நிறைந்ததாகவும் எமது விடுதலைப் போரை முன்னெடுத்துச் செல்வதாகவும் அமைதல் வரவேற்கத்தக்கது.
2. நாடகம் 45 நிமிடங்கள் கொண்டதாக இருத்தல் வேண்டும். (ஐந்து நிமிட விலகல் மட்டும் அனுமதிக்கப்படும்.)
3. (அ) சிறந்த நடிகர
   (ஆ) சிறந்த நடிகை
   (இ) சிறந்த நெறியாள்கை
   (ஈ) சிறந்த எழுத்துரு
   (உ) சிறந்த இசையமைப்பு
   (ஊ) சிறந்த வேடப்புனைவு
   என்பவற்றிற்குச் சிறப்புப் பரிசுகள் வழங்கப்படும்.

சிறுவர் அரங்கு

சிறுவர்களின் வயதிற்கும் உளவளர்ச்சிக்கும் அமைவாகக் கருப்பொருள் அமைய வேண்டும். அத்துடன் நாடக அளிக்கையில் சிறுவர்களே பங்குகொள்ள வேண்டும். பின்னணி வாத்தியக் கருவிகளை மட்டும் பெரியோர் கையாளலாம்.

பொது அறிவுறுத்தல்கள்

(அ) நாடக அளிக்கையில் ஆறு தொடக்கம் பன்னிரண்டு (6—12) வயது வரையுள்ள சிறுவர்கள் கீழ்ப் பிரிவிலும், 13 தொடக்கம் 17 வயது வரை உள்ளவர்கள் மேற்பிரிவிலும் அடங்குவர்,

(ஆ) கீழ்ப்பிரிவு நாடகம் 20 நிமிடங்கள் கொண்டதாக அமைதல் வேண்டும்.
2 நிமிட விலகல் மட்டும் அனுமதிக்கப்படும்)

(இ) மேற்பிரிவின் நாடகம் 30 நிமிடங்கள் கொண்டதாக அமைத்தல் வேண்டும்.
(5 நிமிட விலகல் மட்டும் அனுமதிக்கப்படும்)

(ஈ) சிறுவர் நாடகங்களை பாடசாலைகளோ, தனிநபர்களோ, அமைப்புக்களோ தயாரிக்கலாம்,

(உ) நாடகங்களில் பங்கேற்கும் சிறுவர்களின் வயதெல்லையை பாடசாலைகளாயின் பாடசாலை அதிபர்களும், தனிநபர் தயாரிப்பு அல்லது அமைப்புக்களின் தயாரிப்புக்களாயின் அப்பகுதி கிராம சேவகரும் உறுதிப்படுத்த வேண்டும்.

(ஊ) நாடக அளிக்கையில் பங்குகொள்ளும் சிறுவர்களின் எண்ணிக்கை 15க்கு உட்பட்டதாக இருத்தல் வேண்டும்.

கிராமிய ஆட்டக் கலைப் போட்டிகள்

1. கோலாட்டம்
2. கரகம்
3. ஆட்டக்காவடி
4. கும்மி

பொது அறிவுறுத்தல்கள்

(அ) இவை ஒவ்வொன்றும் 10 நிமிடங்களுக்கு மேற்படாதிருத்தல் வேண்டும்.

✲ குறிப்பு

(அ) ஒவ்வொரு போட்டியிலும் தெரிவு செய்யப்படும் முதல் மூன்று தெரிவுகளுக்கும் பெறுமதிமிக்க பரிசில்கள் வழங்கப்படும்.

(ஆ) நடுவர்களின் தீர்ப்பே இறுதியானது,

(இ) தயாரிப்புக்களுக்கான செலவுகளையும், போக்குவரத்துக்கான செலவுகளையும் தயாரிப்பவர்களே பொறுப்பேற்க வேண்டும். மாவட்ட மட்டத்திலான போட்டிகளுக்குத் தெரிவு செய்யப்படும் தயாரிப்புகளுக்கான போக்குவரத்து வசதிகளை விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழகம் பொறுப்பேற்கும்.

(ஈ) மேலதிக விபரங்களைப் பெற விரும்புவோர் அந்தந்த கோட்டக் கலை, பண்பாட்டுக் கழகச் செயலகங்களுடன் தொடர்பு கொள்ளவும்.

விடுதலைப் புலிகள்
கலை, பண்பாட்டுக் கழகம்,
நடுவப் பணியகம்,
தமிழீழம்.

சித்தன்கேணி – பெரியவளவு

ஸ்ரீமகா கணபதிப்பிள்ளையார் கோவில்
5ஆம் திருவிழா விஞ்ஞாபனம்

காலம்: 18 – 05 – 1994 புதன்
மாலை 6மணிக்கு வசந்தமண்டபப்பூஜை

இரவு **7-30** மணிக்கு

"பண் சுமந்த பாடல்கள்"

என்னும் பொருள் பற்றி
திருமதி மங்கையர்க்கரசி திருச்சிற்றம்பலம்
(முன்னாள் அதிபர், இராமநாதன் கல்லூரி)
சொற்பொழிவு ஆற்றுவார்

இரவு **8-30** மணிக்கு

இரு வயலின் இசை

திரு. V. R ராதாகிருஷ்ணன் திரு S. கோபிதாஸ்	— வயலின்
திரு K. கண்ணதாசன்	— மிருதங்கம்
திரு. சதா. வேல்மாறன்	— கடம்
திரு. S. ராஜு	— மோர்சிங்
திரு. K. மயூரன்	— தபேலா

அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

— 5ஆம் திருவிழா உபயகாரர்.

[30930]

இரண்டாம் ஆண்டு நினைவலைகள்

பிறப்பு:
04
—
04
—
1942

இறப்பு:
10
—
05
—
1992

திருமதி. பரமேஸ்வரி சின்னப்பா

திதி: 18 – 05 – 1994

ஆண்டவன் உனையழைத்து ஈராண்டு போனாலும் - தோன்றுதம்மா
உன்உருவம் தினம்தோறும் எம் கண்ணில்
நிற்கிலமே நீ வந்து எமை அழைத்து கொள்ளுமட்டும்- வித்தகமே
உனைமறவோம் நின்வழியே எங்கள் வழி.

பாசத்துடனும், வேதனையுடனும் நினைவுறும்:
அன்புக் கணவர், மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், தாய், சகோதரர்கள்,
உற்றார், உறவினர்.

கோப்பாய் தெற்கு,
இருபாலை.

[30933]

இப்போட்டிகளில் பங்குபற்றும் போட்டியாளர்கள் கீழ்வரும் மாதிரிப் படிவத்தை பூர்த்தி செய்து விண்ணப்பிக்கவும்.

விடுதலைப் புலிகள்
கலை, பண்பாட்டுக் கழகம்
நடத்தும்
கரும்புலிகள் நாளையொட்டிய
அரங்க விழாவும் கிராமிய ஆட்டக் கலை விழாவும்
விண்ணப்பப் படிவம்:

1) பங்குபற்றும் அமைப்பின் பெயர்:
....
....

2) முகவரி:
....
....
....
....

3) கோட்டத்தின் பெயர்:
....
....

4) நாடகத்தின் தன்மை:
அ: ....
ஆ: ....
இ: ....
ஈ: ....

5) கிராமிய ஆட்டக்கலை:
அ: ....
ஆ: ....
இ: ....
ஈ: ....

இப்போட்டிகளின் விதிமுறைகளுக்கு கட்டுப்பட்டு மேற்படி போட்டிகளில் கலந்து கொள்ளுகின்றேன் என்பதை அறியத்தருகின்றேன்.

....
விண்ணப்பதாரரின் கையொப்பம்

(சி-8...)

EXHIBITION
CAKE and SUGAR CRAFT

யோகி ஹோம் சயன்ஸ் அக்கடமி
மாணவிகளால் நடத்தப்படும்
கேக் மாச்சீனி மலர் அலங்கார

கண்காட்சி

20-05-1994 வெள்ளிக்கிழமை
காலை **10** மணிக்கு

உயர்திரு கா. மாணிக்கவாசகர்

அவர்களால்
(அரச அதிபர், யாழ்ப்பாணம்)
ஆரம்பித்து வைக்கப்படும்

தொடர்ந்தும்
21ஆம், **22** ஆம், **23** ஆம், **24**ஆம்
திகதிகளில்

காலை 9 மணி முதல் மாலை 6 மணி வரை நடைபெறும்.

இதில் மேலைத்தேய, கீழைத்தேய கேக் வகைகள் பலவிதமான மாச்சீனி மலர் அலங்காரங்கள் காட்சிப்படுத்தப்படும்.

YOGI HOME SCIENCE ACADEMY

71-B. NAYANMAR ROAD,
KACHCHERI NALLUR ROAD,
NALLUR, JAFFNA.

கண்காட்சிக்கு ஆதரவு நல்குவோர்:

யாழ்ப்பாணம்-
பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்

[சி 8169]

அரசாங்க அறிவித்தல்
சுகாதார திணைக்களம்
பகிரங்க ஏலவிற்பனை

எனது களஞ்சியத்தில் உள்ள சுமார் 5,000க்கு மேற்பட்ட திரிபோஷா வெற்றுப்பைகள் (உர, கடதாசி, பொலித்தின் பைகள்) 03-06-1994 திகதி காலை 10-30 மணியளவில் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்: ஏலவிற்பனையில் பொருள்களை எடுப்பவர் உடனே பணத்தைச் செலுத்தி அன்றே பொருள்களை அப்புறப்படுத்த வேண்டும். பொருள்களைப் பார்வையிட விரும்புவோர் அன்றைய தினம் காலை 8-30மணி முதல் பிராந்திய மருந்துக்களஞ்சியத்தில் பார்வையிடலாம்.

வைத்திய கலாநிதி நா. விவேகானந்தன்.
பதில் மாகாணப் பிரதிப் பணிப்பாளர்.

சுகாதார சேவைகள் பிராந்தியப் பணிப்பாளர்,
பணிமனை யாழ்ப்பாணம்,
விக்டோரியா வீதி,
யாழ்ப்பாணம்.

(சி.8167)

பயிலுநர் ஆசிரியர் தெரிவு
போட்டிப் பரீட்சைக்கான
விசேட பயிற்சி வகுப்புகள்

பாடநெறி: பொது விவேகம்,
பொது அறிவு

ஆரம்பம்: 21 - 05 - 1994
மு பகல் 9-00 மணி

★ இலவச அச்சடித்த பாடக் குறிப்புகள்
★ வகுப்புகள் - சனி, ஞாயிறு விடுமுறை நாட்களில்
★ நாளாந்தம் - மூன்று மணித்தியாலங்கள் முற்பகல் 9 — 12 மணி வரை
★ முழுப்பயிற்சி நெறிக்கான கட்டணம் ரூபா 250-00

அஸ்ரன் கல்வி நிலையம்

101/10, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(மக்கள் வங்கிக்கு அருகில்)

[சி-8205]

இதய அஞ்சலி

அமரர் V. K. தாமோதரம்பிள்ளை

(Retd. D. O. A, Survey Dept.)
(முன்னாள் வடமராட்சி ஓய்வூதிய சங்கத் தலைவர்)

அமரர் தாமோதரம்பிள்ளை நில அளவைத் திணைக்களத்தில் (D O A) ஆக கடமை புரிந்து இளைப்பாறியவர். அன்னார் வடமராட்சி ஓய்வூதிய சங்கத் தலைவராக பதவி புரிந்த காலத்தில் ஓய்வூதியர்களின் இடைப்பாற்று வேதனத்தை உரிய காலத்தில் பெற்றுக் கொள்வதற்கு வேண்டிய சகல நடவடிக்கைகளும் மேற்கொண்டு பெரும் பணிபுரிந்தார். குறிப்பாக அரசாங்க ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட விசேஷ படியை ஓய்வூதியர்களும் பெற்றுக் கொள்வதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் தொடர்பு கொண்டு ஆவன செய்தார்.

அன்னாரின் மறைவு அவரது குடும்பத்திற்கும் மட்டுமன்றி எமக்கும் பேரிழப்பாகும். அவரின் மறைவு குறித்து அதிர்ச்சியின் மத்தியில் ஆழ்ந்த அனுதாபங்களை அவரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு இதய பூர்வமாக தெரிவித்துக் கொள்வதுடன், அவரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கிறோம்.

சி. ஸ்கந்தா,
பதில் தலைவர்,
வடமராட்சி ஓய்வூதியர் சங்கம்.

கரவெட்டி:
30 - 04 - 1994

[30923]

உதயன்
192/1, நாவலர் வீதி
யாழ்ப்பாணம்

அரசியல் வங்குரோத்து

காமினி திசநாயக்காவை எம். பி. ஆக்கும் முயற்சி கைகூடாது போனால் நாடாளுமன்றத்தைக் கலைத்து தேர்தல் நடத்தவும் ஜனாதிபதி விஜேதுங்க தயங்க மாட்டார் என்று கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

ஜனாதிபதி ஆதரவாளர்களுக்கும் எதிர்ப்பாளர்களுக்கும் இடையில் கட்சிக்குள் உள்கட்சிப் போராட்டம் வலுத்து வருவதையே இது காட்டுகிறது.

காமினி திசநாயக்காவுக்கு இடம் கொடுப்பதற்காக, தேசிய பட்டியல் மூலம் தெரிவான எம். பிக்களில் எவரேனும் ஒருவரை ராஜினாமாச் செய்யுமாறு ஜனாதிபதி கோரியிருந்தார்:

தனது நோக்கத்தை நிறைவேற்றுவதற்காக சகல வழிகளிலும் அவர் கடந்த காலங்களில் செல்வாக்கைப் பிரயோகித்திருந்தார். பலன் எதுவும் ஏற்படவில்லை.

எம். பி. பதவியை ராஜினாமாச் செய்வதற்குச் சமமாறாக பெரும் தொகைப் பணத்தை வழங்கவும் ஆசை காட்டப்பட்டது.

ஆனால் எந்த ஒரு எம். பியும் அசைந்து கொடுத்ததாகத் தெரியவில்லை.

இந்த நிலையிலேயே நாடாளுமன்றத்தைக் கலைக்கப்போவதாக தற்போது மறைமுகமாக பயமுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது,

நாடாளுமன்றத்தைக் கலைக்கப்போவதாக மிரட்டினால் சில சமயம் எம். பிக்கள் பணிந்து விடுவார்கள் என்று ஜனாதிபதி கருதுகிறார் போலும்.

ஆனால் இது கிணறுவெட்டப் பூதம் கிளம்பிய கதையாகிவிட்டது.

ஹேமாவுக்கு அமைச்சர் பதவி கொடுத்தால் மட்டுமே தாம் எம். பி. பதவியை ராஜினாமாச் செய்யத் தயார் என்று தேசியப்பட்டியல் மூலம் தெரிவான எம். பிக்கள் மூவர் நிபந்தனை விதித்துள்ளனர்.

காமினி திசநாயக்காவை அமைச்சரவைக்குள் கொண்டு வருவதற்கு ஜனாதிபதி விஜேதுங்க திட்டமிட்டதே, தனது செல்வாக்கைப் பலப்படுத்தவும், பிரேமதாஸா ஆதரவாளர்களின் செல்வாக்கை ஒழித்துக் கட்டவுமே ஆகும்.

பிரேமதாஸா மீது அரசியல் குற்றப் பிரேரணை கொண்டு வந்ததற்காக ஐ. தே. கவில் இருந்து விலக்கப்பட்டவர் தான் காமினி திசநாயக்கா.

இப்படியானவர் பிரேமதாஸாவின் துணைவியாரான ஹேமாவுடன் ஒரே அமைச்சரவையில் இடம்பெறுவது சாத்தியமாகுமா? சாத்தியப்படவே மாட்டாது,

ஆகவே ஜனாதிபதியால் ஏற்க முடியாத நிபந்தனை ஒன்றையே தாம் பதவி விலகுவதற்கு எம். பிக்கள் விடுத்துள்ளனர் என்பதில் சந்தேகம் இல்லை.

ஜனாதிபதி விஜேதுங்காவுக்கு தற்போது ஏற்பட்டுள்ள அரசியல் வங்குரோத்து நிலை முன்னர் பதவியில் இருந்த நிறைவேற்று அதிகாரம் உடைய எந்த ஒரு ஜனாதிபதிக்கும் ஏற்படாத ஒன்றாகும்.

தனது சொந்தக்கட்சியின் உறுப்பினர் ஒருவரையே ராஜினாமாச் செய்யவைக்க முடியாத நிலை அவருக்கு ஏற்பட்டிருப்பது வெட்கக்கேடானது. ஜனாதிபதி பதவி வகிப்பதற்கே அருகதையற்றது.

தற்போதைய அரசியல் வங்குரோத்து நிலைக்கு அவர் ஆரம்பத்தில் இருந்து கடைப்பிடித்த கொள்கைகளே காரணம் எனலாம்.

பதவி ஏற்ற கையோடு தமிழர் பிரச்சினையைப் பயங்கரவாதப் பிரச்சினை என்றார். இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு அவருக்கு விருப்பம் இருக்கவில்லை அவரிடம் திட்டம் இல்லை.

அதேபோல, நாட்டின் முன்னேற்றத்துக்கும் மக்கள் நலனுக்கும் உதவக்கூடிய சொந்தத் திட்டங்களை வகுத்துச் செயற்படுத்தும் திறமையும் அவரிடம் இல்லை.

தாம் பதவிக்கு வந்த சில நாட்களிலேயே பிரேமதாஸாவின் பெயரையும் அவரது கொள்கைகளையும் ஓரங்கட்டிய விஜேதுங்கா இப்போது தேர்தலில் வெல்வதற்காக பிரேமதாஸா பெயரைச் சொல்லி அவரது திட்டங்களை செயற்படுத்த அவசரப்படுகிறார். விஜேதுங்காவின் அரசியல் வங்குரோத்துக்கு இது ஒன்றே நல்ல உதாரணமாகும்.

1930களில் பாரம்பரிய தமிழ்ப் பகுதிகளில்

சிங்களக் குடியேற்றம் ஆரம்பித்ததோடு இனப்பிரச்சினையும் தொடங்கி விட்டது!

முன்னாள் ராஜதந்திரி திஸநாயக்க கருத்து

கொழும்பு, மே 18

இனப்பிரச்சினை 1956இல் ஆரம்பமாகவில்லை. அதற்கு முன்னரே — 1930களில் பாரம்பரிய தமிழ்ப் பகுதிகளில் சிங்களக் குடியேற்றவாசிகளை குடியமர்த்த ஆரம்பித்த கையோடு இனப்பிரச்சினையும் ஆரம்பமாகி விட்டது.

முன்னாள் ராஜதந்திரி திரு. ரி. டி. எஸ் ஏ. திஸநாயக்க கொழும்பில் அங்கிலிக்கன் கதிட்ரலில் நடந்த கருத்தரங்கு ஒன்றில் பேசுகையில் முன்கண்டவாறு குறிப்பிட்டார்.

திரு. திஸநாயக்கா இலங்கையின் தூதராக இந்தோனேஷியா உட்பட பல நாடுகளில் பணியாற்றியிருந்தார்.

ஸ்ரீலங்காவின் வேதனை, ஸ்ரீலங்காவின் குழப்பம் என்ற தலைப்புகளில் இவர் நூல்களை வெளியிட்டிருக்கிறார்.

''இனப்பிரச்சினைத் தீர்வில் திருச்சபைகள் ஆற்றும் பங்கு'' என்ற தலைப்பில் பேசுகையில் திரு. திஸநாயக்கா மேலும் சொன்னதாவது:

இலங்கையின் முதலாவது பிரதமர் டி. எஸ். சேனநாயக்கா சிங்களக் குடியேற்றக் கொள்கையைக் கொண்டு வந்தார். பின்னர் பதவிக்கு வந்த டட்லி சேனநாயக்கா, தந்தையின் குடியேற்றக் கொள்கையை ஆதரித்தார்.

தமிழர்கள் தென்பகுதிக்கு பெரும் எண்ணிக்கையில் வருவதை சமநிலைப்படுத்த வடபகுதிக்குச் சிங்கள மக்களை அனுப்ப வேண்டும் என்ற அடிப்படையில்தான் தந்தையின் குடியேற்றக் கொள்கை இருப்பதாக டட்லி சேனநாயக்கா வாதாடினார்.

எப்படியாயினும் — நாட்டின் கரையோரப் பகுதியில் ஐந்தில் மூன்று பங்கை உள்ளடக்கியதாக, நாட்டின் மூன்றிலொரு பகுதிக்கு சுயாட்சி கோரியது ஆத்திரத்தை ஏற்படுத்தியது.

புரட்சி செய்யும் நிலைவரம் ஏற்படுவதற்கு, அநீதியாக நடத்தப்படுகிறோம் என்ற உணர்வுதான் காரணமாகிறது. இது உள்ளத்தில் கசப்புணர்வை ஏற்படுத்துகின்றது: இதனை மன்னிப்புக்கோருவதன் மூலம் தான் அகற்ற முடியும்.

கிறிஸ்தவ திருச்சபைகள் வடபகுதியுடனான தொடர்பை கட்டியெழுப்பும் முன் முயற்சிகளில் ஈடுபட வேண்டும். அத்துடன் கிறிஸ்தவ சபை பௌத்த மத குருமார்களுடன் நெருக்கமாகச் செயற்பட வேண்டும்.

வடபகுதி மக்கள் சமாதானத்தை கோருகின்றனர். இந்த யுத்தம் முடிவுக்கு வந்தால் நாட்டின் பொருளாதார வளர்ச்சி 10 சத வீதத்தினால் அதிகரிக்கும்.

சில மத அடிப்படைவாதிகள் மக்களை கிறிஸ்தவர்களாக்கும் முயற்சியில் ஈடுபடுவது சில பிரச்சினைகளை ஏற்படுத்துகிறது: சிங்கள பௌத்த பெரும்பான்மையினர் சிங்களக் கிறிஸ்தவர்களை நம்புகின்றனர்

இன்று முப்படைகளின் தளபதிகளும் பொலிஸ் மா அதிபரும் கிறிஸ்தவர்களாக உள்ளனர். இதனை பௌத்தர்கள் எதிர்க்கவில்லை. திறமை காரணமாகத்தான் சிங்களக் கிறிஸ்தவர்கள் படைத்தளபதிகளாகப் பதவி உயர்வு பெற்றிருப்பதால் இது குறித்து பதற்றமடைய காரணமே இல்லை என்று பல பௌத்த மத குருமார்கள் என்னிடம் தெரிவித்தனர்.

இவ்வாறு திரு. திஸநாயக்கா தெரிவித்தார்.

இரு நேரப் பாடசாலை...!

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தரவு குறித்து அதிபர் கூட்டத்தில் விளக்கினார்.

இது குறித்த கூட்டத்தில் ஏகமனதாகத் தெரிவிக்கப்பட்ட கருத்துகள் வருமாறு:-

★ கடந்த மூன்று வருடகாலமாக புலமைப்பரிசில் பரீட்சைகளில் தகுதி பெற்ற மாணவர்களே ஏறத்தாழ நூறுவீதம் யாழ். இந்துவில் அனுமதி பெறுகிறார்கள். அவர்களில் பெரும்பாலானோர் கல்லூரி சூழலைச் சேர்ந்தவர்கள் அல்லர்; தூர இடங்களைச் சேர்ந்த வெளி மாணவர்களாவர்.

அவர்களுக்கு வேறு போக்குவரத்து வசதி இல்லை.

இதனால் கல்லூரிக்கு சமுகம் தரும் மாணவர்களில் 90 வீதமானோர் சைக்கிள்களிலேயே வருகிறார்கள். அவர்கள் அனைவரும் தமது சைக்கிள்களை கல்லூரிக்கு வெளியே கொண்டு வந்து சேர்ப்பதற்கு மட்டும் 15 முதல் 20 நிமிட நேரம் தேவைப்படுகிறது. ஆகவே அவர்களுக்கு ஒரு மணி நேர மதிய போசன இடைவேளை தமது தேவையை நிறைவு செய்யப் போதுமானதா?

இருவேளைச் சாப்பாடு தேவை

★ தற்போது தூர இடத்தில் இருந்து கல்லூரிக்கு வரும் மாணவர்களே அதிகம் பேர். அவர்கள் தமது காலை உணவைக் கட்டி எடுத்து வருகிறார்கள். இனிமேல் பாடசாலைகள் இருநேரமாக இயங்கினால் அவர்கள் இரண்டு சாப்பாட்டுப் பொதிகளை — காலையில் நேரத்துடன் சமைத்து - கட்டி எடுத்து வர வேண்டியிருக்கும். தற்போதைய பொருளாதார நெருக்கடிக் காலத்தில் இது சாத்தியமானதல்ல.

மேலும் குடாநாட்டில் உள்ள மக்களில் மூன்றில் ஒரு பகுதிகள் அகதிகளாக இடம்பெயர்ந்தவர்கள். ஐந்தில் மூன்று பகுதியினர் ஏதோ ஒரு வகையில் பாதிக்கப்பட்டவர்கள்; அவர்கள் தொழிலின்றி, வருவாயின்றி, பொருளாதாரக் கஷ்டத்தில் சிக்கி நிற்கிறார்கள்.

இவர்களால் இருவேளைச் சாப்பாட்டை நேரத்துடனேயே தமது பிள்ளைகளுக்குக் கட்டிக் கொடுத்து விட முடியுமா என்பது கேள்விக்குறியே.

★ தலைநகர் கொழும்பு போன்ற இடங்களில் — சூழ்நிலை சரியாக உள்ள பிரதேசங்களில் — நாட்டின் தரம் மிக்க பிரபல கல்லூரிகள் உட்பட பெரும்பாலான பாடசாலைகள் ஒரு நேரமாகவே இயங்குகின்றன. சிறந்த பெறுபேறுகளை வெளிப்படுத்தும் றோயல் கல்லூரி போன்றவை கூட ஒரு நேரமாகவே இயங்கும் போது இங்கு மட்டும் ஏன் மேலிடத்திலிருந்து இருநேரப் பாடசாலைத் திட்டம் திணிக்கப்படுகின்றது?

இரவு 8 மணிக்கு வீட்டுக்குத் திரும்புவர்

★ காலை 7 மணிக்கு வீட்டிலிருந்து புறப்பட்டு தூர இடத்தில் உள்ள பாடசாலைக்கு சைக்கிளிலேயோ பஸ்ஸிலேயோ செல்லும் மாணவர் பிற்பகல் 3 30 மணிக்கு பாடசாலைக் கல்வியை முடித்து மாலை 4 மணி முதல் 6 30 மணி வரை தனியார் கல்வி நிறுவனத்திற்குச் சென்று இரவு 8 மணிக்குப் பின்னர் வீட்டுக்குத் திரும்பும் நிலைதான் இனி ஏற்படும்.

தனியார் கல்வி நிறுவனப் போதனை அவசியமானது என்ற காலகட்டத்தில் எமது கல்வி நிலை உள்ளதால் இது குறித்தும் கவனிப்பது அவசியம்.

★ குடாநாட்டில் திடீர் திடீரென குண்டு வீச்சு,ஷெல் தாக்குதல்களினால் பதற்றம் ஏற்படுவது வழமை. அந்த வகையில் பாடசாலை நேரத்தை நீடிக்காமல் தவிர்ப்பது நல்லது.

★ மாணவர் உணவு முத்திரை போன்ற விடயங்களுக்கு மாணவர்களின் ஒரு நேர வரவு போதுமானதாக இருக்கும் என்பதும்—

கஷ்டகால நெருக்கடிகளை முன்னிட்டு பிற்பகலில் சொற்ப வருமானம் தரக்கூடிய சிறு சிறு வேலைகளில் மாணவர்கள் ஈடுபட்டு வருவது வழக்கம் என்பதும்—

பிற்பகல் வகுப்புகளுக்கு மாணவர்கள் வரவைத் தடுப்பதாக அமையக் கூடும்.

— இவ்வாறு கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

இக் காரணங்களினால் இரு நேரப் பாடசாலைத் திட்டத்தைக் கைவிடும்படி கல்வித் திணைக்களத்தை வற்புறுத்துவது என்றும் தீர்மானிக்கப்பட்டது.

கடந்த சில வருடங்களிலும் இவ்வாறு இரு நேரப் பாடசாலைத் திட்டத்தை அறிமுகப்படுத்த யாழ். கல்வித் திணைக்களம் முயற்சித்ததும்—

நடைமுறைச் சிக்கல்கள் மற்றும் அத்திட்டத்தின் பிரயோசனமில்லாத தன்மை ஆகியவற்றினால் சில காலங்களிலேயே அம் முயற்சிகள் கைவிடப்பட்டு வந்தமையும் — கூட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்டது.

தற்போது இருநேரப் பாடசாலைத் திட்டத்தை அமுல் செய்யும்படி பாடசாலைகளுக்கு உத்தரவிட்டுள்ள கல்வித் திணைக்களம், என்ன நோக்கத்துக்காக — என்ன பயன்கருதி — இது நடைமுறைப்படுத்தப்படுகிறது என்பதை வெளிப்படுத்தவில்லை என்பது குறிப்பிடத்தக்கது:

சம்பந்தப்பட்ட சாராரின் கருத்து எதனையும் கோராது உடனடியாக — அவசரமாக — இத்திட்டத்தை அமுல் செய்யும்படி வெறும் உத்தரவு மட்டுமே பாடசாலை அதிபர்களுக்கு அனுப்பப் பட்டுள்ளது. (உ)

லட்சிய...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

என்பதும் அந்த அறிக்கையில் தெரியப்படுத்தப்பட்டுள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகளை வெளிப்படையாக முக்கியத்துவப்படுத்தியுள்ள அந்த அறிக்கையில் இலங்கையின் வடக்கு கிழக்கில் பெரும்பாலான பகுதிகளை அவர்கள் கட்டுப்பாட்டில் வைத்திருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-5)

குடிதண்ணீர் விநியோகம்

யாழ்ப்பாணம், மே 18

பாஷையூர் பகுதி மக்களுக்கு யாழ். மாநகராட்சி மன்றம் பவுசர் மூலம் குடிதண்ணீர் வழங்கி வருகின்றது. ([illegible])

புலிகளின் குரல் வானொலியில்

18 - 05 - 1994

புதன் இரவு

★ 8-01 — முதன் முதல் சயனைற் அருந்தி வீரச்சாவெய்திய பசீன் நினைவாக சிறப்பு நிகழ்ச்சி ''சயனைற் சாப்தம்''
★ 8-20 — ஏர் முனை 'என்னைத் தெரியுமா?' — சுயசரிதை
★ 8-30 — செய்திகள்
★ 8-40 — நாடகம் ''முடிவு''

19 - 05 - 1994

வியாழன் காலை

★ 7-02 மாவீரவணக்கம்
★ 7-15— விடுதலைக்கீதங்கள்
★ 7-30 — செய்திகள்
★ 7-35 — பத்திரிகைச் செய்திகள்
★ 7-40 — விடுதலைக் கீதங்களின் தொடர்ச்சி

4 புதிய...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தங்கள் எம். பி. பதவிகளை இராஜினாமாச் செய்யும்படி இவர்களிடம் ஜனாதிபதி கோரிக்கை விடுத்தார்.

அந்த அறுவரில் எம். எச். அமித் தவிர ஏனையோர் பல்வேறு காரணங்களைக் காட்டி ஜனாதிபதியின் கோரிக்கையை ஏற்று தாங்கள் பதவி விலக விரும்பவில்லை என்று திரு. விஜேதுங்காவிடம் தெரிவித்து விட்டனர்.

இந்த ஆறு எம். பிக்களும் முன்னாள் ஜனாதிபதி பிரேமதாஸாவினால் இப்பதவிக்கு நியமிக்கப்பட்டவர்கள் என்றும் —

அவர்கள் பதவி விலக மறுப்பது தற்போதைய ஜனாதிபதி விஜேதுங்காவுக்கு ஏற்பட்ட பின்னடைவாகும் என்றும் அரசியல் வட்டாரங்கள் தெரிவித்தன.

ஐக்கிய தேசியக் கட்சியினுள் தற்போது நிலவும் அதிகாரப் பூசல். தேர்தல் நெருங்கும் சமயத்தில் கட்சியை பல பிரிவுகளாக சிதைந்து போகச் செய்து விடும் என்று அக்கட்சிக்கு நெருங்கிய வட்டாரங்கள் தெரிவித்தன. (உ-எ-6)

ஸ்ரீலங்கா...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தமிழகத்தில் பெரும் பதற்றத்தை ஏற்படுத்தியுள்ளது

ஸ்ரீலங்கா கடற்படையினர் தொடர்ந்து தமிழக மீனவர்களைத் தாக்கி வருவது தமிழகத்தில் பெரும் கொந்தளிப்பு நிலையை மீண்டும் ஏற்படுத்தியிருப்பதாகவும் அறிவிக்கப்படுகிறது.

கட்சி சார்பற்ற முறையில் அனைத்து அமைப்புகளும் இவ்விடயத்தில் [illegible] போர்க்குரல் எழுப்ப [illegible] இருப்பதாகவும் கூறப் படுகிறது.

சேர்ச்சிலின் காதல் கடிதம் இவ்வாரம் லண்டனில் ஏலம்

லண்டன், மே 18

இங்கிலாந்தின் யுத்த காலத்துப் பிரதமர் வின்ஸ்டன் சேர்ச்சில் 90 ஆண்டுகளுக்கு முன்னர் எழுதிய ஏழு காதல் கடிதங்கள் ஏலத்தில் விற்கப்படவிருக்கின்றன.

இக்காதல் கடிதங்கள் லண்டனில் இவ்வாரம் ஏலத்தில் விடப்படவுள்ளன.

1904இல் 20 வயதாக இருந்த சேர்ச்சில், கப்பல் அதிபர் ஒருவரின் புதல்வியான மியூரியல் வில்சன் என்ற பெண்ணைக் காதலித்து வந்தார்; அப்போது அவர் அப்பெண்ணுக்கு எழுதிய காதல் கடிதங்களே இப்போது கண்டுபிடிக்கப்பட்டு ஏலத்தில் விற்கப்பட உள்ளன.

சேர்ச்சிலின் காதலை நிராகரித்த அப்பெண் பின்னர் முதலாம் உலக யுத்தத்தில் காயமடைந்த இராணுவ அதிகாரி ஒருவரை திருமணம் செய்துகொண்டார். (ஒ-எ)

வெள்ளை மாளிகையில் இன்று ராவ் - கிளின்ரன் பேச்சு!

வாஷிங்டன். மே. 18

அமெரிக்க ஜனாதிபதி பில் கிளின்டனும் இந்தியப் பிரதமர் பி. வி. நரசிம்மராவும் இன்று வாஷிங்டன் வெள்ளை மாளிகையில் உச்சி மாநாடு ஒன்றை நடத்துகின்றார்கள்,

இப் பேச்சுகளின் போது காஷ்மீர் பிரச்சினை முக்கியமாக விவாதிக்கப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.

அணு ஆயுத தடுப்புப் பரவல் உடன்படிக்கையில் இந்தியா கையெழுத்திட மறுத்து வருகிறது.

இது தொடர்பாக இந்தியாவைப் பணியவைக்கும் முயற்சிகளை அமெரிக்கா எடுத்து வந்தது. இம் முயற்சிகள் பலனளிக்காத நிலையில் கிளின்டன் — ராவ் பேச்சுகள் இன்று நடைபெறுகின்றன.

தெற்காசியாவில் இந்தியாவும் பாகிஸ்தானும் அணு ஆயுத நாடுகளாக வளர்ந்து வருவது, காஷ்மீர் பிரச்சினை யுத்தமாக வெடிக்கும் போது அது] அணு ஆயுத யுத்தமாக மாறும் அபாயத்தை ஏற்படுத்தும் என்று அமெரிக்கா கருதுகின்றது.

இந்த நிலையில் ராவ் — கிளின்ரன் பேச்சுக்கள் இந்திய உபகண்டத்தில் குறிப்பிடத்தக்க மாற்றங்களைக் கொண்டு வரலாம் என்று அரசியல் அவதானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

குடும்பஸ்தர் சுட்டுக் கொலை

யாழ்ப்பாணம், மே. 18

மட்டக்களப்பு மாவட்டம் பெரிய போரதீவில் தமிழ் குடும்பஸ்தர் ஒருவர் கடந்த வெள்ளியன்று விசேட அதிரடிப்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

அவர் தனது வீட்டு முற்றத்தில் உறங்கிவிட்டு எழுந்து வீட்டுக்குள் செல்ல முற்பட்ட சமயம் இரவு ரோந்தில் ஈடுபட்ட படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

கோயில் போரதீவைச் சேர்ந்த நான்கு பிள்ளைகளின் தந்தையான மு. சோமசுந்தரம் (வயது 55) என்பவரே கொல்லப்பட்டவராவார். (ஒ-5)

தேசிய...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அவர் மேலும் கூறியதாவது:-

தற்போது நாடு புதிய பிரச்சினைகளை எதிர் நோக்குகிறது. தேசிய பட்டியல் மூலமாக நாடாளுமன்றத்துக்கு தெரிவு செய்யப்பட்டவர்கள் கட்சித் தலைமைப் பீடத்துக்கும், அரசாங்கத்துக்கும் பெரும் கஷ்டங்களை உருவாக்குகிறார்கள்.

புதியவர்களுக்கு இடம் கொடுக்காமல் தேசிய பட்டியல் எம். பிக்கள் ராஜினாமாச் செய்ய மறுப்பது கட்சித் தலைமைத்துவத்தின் அதிகாரத்தினை அலட்சியப் படுத்துவதுடன் அரசியல் நிலையிலும் குழப்பத்தினை உண்டு பண்ணுவதாக உள்ளது இவ்விடயம் மேலும் சிக்கலாவதற்கு முன் பிரச்சினை தீர்க்கப்படும் என நம்புகிறேன்.

தேர்தலின் பின் எந்த ஒரு கட்சியும் அதிகாரத்துக்கு வர சிறுபான்மை மக்களின் ஆதரவு அத்தியாவசியமானது என்பதனை பிரதான தேசிய அரசியல் கட்சிகள் உணர வேண்டும். அம்மாதிரியான ஓர் ஆதரவு இல்லாமல் அரசாங்கத்தினை நிறுவ முடியாது.

சிறுபான்மையினரைக் குறைத்து மதிப்பிடமுடியாது அனைத்து இனங்களிடையேயும் நல்லுறவும் நம்பிக்கையும் வளர்க்கப்பட வேண்டும். அதன் மூலமே சமாதானமும், ஐக்கியமும்நாட்டில் தோன்ற முடியும். இதனை அரசியல் கட்சிகள் உணர வேண்டும். — என்றார். (உ-ஒ-6)

கிழக்கு மாகாணத்தில்

அரச ஊழியர் இடமாற்றம் பெற 'அரசு நிபந்தனை

கொழும்பு. மே. 18

கிழக்கு மாகாணத்தில் இருந்து அரச ஊழியர் இடமாற்றம் பெறுவதற்கு அரசாங்கம் நிபந்தனை விதித்துள்ளது.

இடமாற்றங்கோரி விண்ணப்பித்துள்ள ஊழியர்களின் இடங்களில் அவர்களுக்குப் பதிலாக பணி புரிவதற்கு மாற்று ஊழியர்கள் இருந்தால் மட்டுமே இடமாற்ற விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் என்றும் — மாற்று ஊழியர் இல்லாத இடமாற்ற விண்ணப்பங்களை ஒரு வருடத்துக்கு இடைநிறுத்தி வைக்கவும் அரசாங்கம் தீர்மானித்திருப்பதாக பொது நிர்வாக அமைச்சின் செயலாளர் புஸ்ஸெல்லதெனியா சகல திணைக்களங்களின் தலைவர்களுக்கும் அறிவித்திருக்கிறார். (ஒ-எ)

பாங்கொக்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

மென்டிஸ், யாழ். செயலகத் திட்டப் பணிப்பாளர் திரு. செ. பத்மநாதன் ஆகியோர் பங்குபற்ற இருக்கின்றனர்.

யாழ்ப்பாணத்தில் இருந்து செல்லும் திரு. செ. பத்மநாதன் இஸ்ரேலில் பிராந்திய அபிவிருத்தி பற்றி ஆய்வு செய்து முதுமாணிப் பட்டம் பெற்றவர் விசேட பொருளியல் பட்டதாரியும் ஆவார்,

வடமராட்சிக்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வதி (44 வயது) என்ற பெண்ணும் வீட்டில் நித்திரையிலிருக்கும்போது கடற்படையினரின் பிரங்கிக் குண்டுபட்டு கைமுட்டியில் காயமுற்றார்.

இவ்விருவரும் சிகிச்சைக்காக மந்திகை அரசினர் ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

உடுப்பிட்டியிலுள்ள வீடொன்றின் கூரைகளும் இத்தாக்குதல்களினால் சேதமடைந்தன. (ஒ-173-155)

சொத்தி உபாலி...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பவம் இடம்பெற்ற தினம் தாம் அங்கு இருக்கவில்லை என்று கூறும் உபாலியின் கூற்றை ஏற்றுக் கொள்ள பொலிஸ் அதிபர் எடிஸன் குணதிலக மறுத்து விட்டார் என்று தெரிவிக்கப்படுகிறது.

சம்பவம் இடம்பெற்ற சமயம் சொத்தி உபாலி நீர்கொழும்பில் இருந்தார் என்பதை நிரூபிப்பதற்கு போதுமான சாட்சியம் தம்மிடம் இருப்பதாக பொலிஸ் அதிபர் தெரிவித்திருக்கிறார். (ஒ-எ-6)

கணித பாட கருத்தரங்கு

யாழ்ப்பாணம், மே 18

1994இல் முதற் தடவையாக க. பொ. த. (உயர்தர) தூயகணித பாடத்திற்குத் தோற்றும் பாடசாலை மாணவருக்கான கருத்தரங்கு ஒன்றினை யாழ். வலயம் 01 கணித விஞ்ஞான மூலவள நிலையத்தின் கணிதப் பிரிவு வேம்படி மகளிர் கல்லூரியில் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை காலை 8-30 மணி தொடக்கம் மாலை 3-30 மணி வரை நடத்தவுள்ளது.

1993ஆம் ஆண்டு தூயகணித பாட வினாக்கள் ஆராயப்பட்டு, அவற்றிற்கு எவ்வாறு பொருத்தமாக விடையளிக்க வேண்டும் என்பது பற்றி பிரதம பரீட்சகரும், யாழ். பல்கலைக்கழக கணிதப் பிரிவின் சிரேஷ்ட விரிவுரையாளருமான திரு. பொ. மகி கருத்துரை வழங்குவார்.

பங்குபற்ற விரும்பும் பாடசாலை மாணவர்கள், 1993ஆம் ஆண்டு தூயகணித (1.11) பாட வினாக்களுக்கு விடையளித்து அவற்றையும் எடுத்து வருமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள். [எ]

வீரவணக்க கூட்டம்

யாழ். வட்ட மாவீரர் வீரவணக்கக் கூட்டம் இன்று புதன்கிழமை இரவு 7-30 மணிக்கு வண்ணார்பண்ணை ஐயனார் கோயில் முன்றிலில் நடைபெறும்.

கூட்டத்துக்கு வட்டப் பொறுப்பாளர் செந்தமிழன் தலைமை வகிப்பார். (எ)

வினாத்தாள்கள் வந்து சேர்ந்தன

வடமராட்சி மே 18

தாதிகளைத் தெரிவு செய்வதற்கான பரீட்சை, தொழில்நுட்பக் கல்லூரி பரீட்சைகள் ஆகியவற்றுக்கான வினாத்தாள்கள் கொழும்பிலிருந்து நேற்று எடுத்து வரப்பட்டன.

யாழ். கல்வித் திணைக்கள அதிகாரி ஒருவர் அவற்றை கொழும்பிலிருந்து விமான மூலம் பலாலிக்கு எடுத்து வந்தார். அங்கிருந்து கப்பல் மூலம் பருத்தித்துறைக்கு அவை எடுத்து வரப்பட்டன. (ஒ-173)

மாவுடன் மாஹோ நேற்று வந்தது

வடமராட்சி, மே 18

3 ஆயிரம் மெற்றிக் தொன் மாவுடன் மாஹோ கப்பல் நேற்றுக் காலை பருத்தித்துறை துறைமுகத்தை வந்தடைந்தது.

உடனடியாக இறக்கும்பணி ஆரம்பிக்கப்பட்டது.

இன்று

யாழ், லயன்ஸ் கழகத்தின் ஆதரவில் யாழ் இந்துக் கல்லூரி சதுரங்க கழகம் நடத்தும் பாடசாலைகளுக்கு இடையிலான சதுரங்கச் சுற்றுப்போட்டி இந்துக்கல்லூரி விடுதி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இன்று பிற்பகல் 3 மணி முதல் தொடர்ந்து நான்கு நாட்கள் போட்டிகள் இடம் பெறும், எதிர்வரும் சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு பரிசளிப்பு நிகழ்ச்சி நடைபெறும், (உ—5)

எதிர்காலம் இளைப்பாற நடுவோம் மரக்கன்று

கணக்கியல் A/L 95

பிரிவு 3
ஆரம்பம்: 21-05-1994
சனி மாலை 4மணி

ஆசிரியர்: **D. SAM**
76/2, TEMPLE ROAD, JAFFNA.

✻ பகுதி Iஇன் மிக முக்கிய அலகுடன் ஆரம்பம்
★ அனுமதிகள் வரையறுக்கப்பட்டன.

[30963]

யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை

பழைய மாணவர் சங்கம் வருடாந்தப் பொதுக்கூட்டம்

மேற்படி சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் எதிர்வரும் 01-06-1994 [புதன்கிழமை] பிற்பகல் 3-30 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெறும். இக் கூட்டம் பற்றிய அறிவித்தல் அங்கத்தவர்களுக்கு தனியாக அனுப்பப்படுகிறது.

வி. ரி. மனோகரன்,
கௌரவ செயலாளர்

15-05-1994
(சி/8204)

யாழ். வைத்தீஸ்வராக் கல்லூரி

நீண்ட தூர வீதி ஓட்டப் போட்டி

காலம்: 20-05-1994 வெள்ளிக்கிழமை
காலை 5-30மணி

பிரதம விருந்தினர்: திரு. மு. கிருபாலன்
[பழைய மாணவர் யா/வைத்தீஸ்வரக் கல்லூரி)
''கிருபா நகைமாளிகை''

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.

(7390)

யாழ்ப்பாண மாவட்ட கூட்டுறவுச் சபை

இல 14, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்

பதவி வெற்றிடம்

அச்சக முகாமையாளர்:

(தற்காலிக மானது)

சம்பளத்திட்டம்: இல. 165/8
1305 — 2005
40×5 — 50 × 10

இத்துடன் கூட்டுறவு வேலையாளர்களுக்கான கூ. வே ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டுள்ள சகல படிகளும் வழங்கப்படும்.

விண்ணப்பதாரியின் தகைமைக்கு ஏற்ப உரிய சம்பளத்திட்டத்தில் உரிய இடத்தில் அமர்த்தப்படும்.

வயதெல்லை: 25 — 40

கூட்டுறவுச் சங்க பணியாளர்களுக்கு வயதெல்லை விலக்களிக்கப்பட்டுள்ளது.

விண்ணப்பங்கள் சங்கத்தினூடாக அனுப்பி வைத்தல் வேண்டும்.

தகைமைகள்:

[அ] கூட்டுறவுப் பணியாளர்களின் 9ஆவது சம்பள அளவுத்திட்டத்தில் 3வருடத்துக்கு குறையாத அச்சகத் தொழில் துறையிலான அனுபவமும் அல்லது 10ஆவது சம்பள அளவுத்திட்டத்தில் 6வருடங்களுக்கு குறையாத இத்துறை சம்பந்தப்பட்ட துறையிலான அனுபவமும்.

அல்லது

[ஆ] கூட்டுறவுப் பணியாளர் தராதரப்பத்திர உயர்தர பயிற்சிநெறியில் அச்சக முகாமைத்துவம் தொடர்பான உயர்தர தேசிய சான்றிதழ் பாடநெறிப் பயிற்சியில் சித்தியுடன்/க.பொ.த உயர்தர பரீட்சையில் 03 பாடங்களிலான சித்தியுடன் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றில் நான்கு வருடங்களுக்குக் குறையாத அச்சக முகாமையாளராக கடமையாற்றிய அனுபவம்.

- ★ விண்ணப்பங்கள் சொந்த கையெழுத்தினால் நிரப்பப்பட வேண்டும்
- ★ விண்ணப்ப முடிவுதிகதி 05 - 06 - 1994
- ★ சபையினால் கோரப்படும் பிணையைச் செலுத்துதல் வேண்டும்.
- ★ விண்ணப்பங்கள் ''செயலாளர்'' யாழ். மாவட்டக் கூட்டுறவுச் சபை. இல; 14, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம் என முகவரியிட்டு பதிவுத் தபாலில் அனுப்பப்பட வேண்டும்.

பதில் செயலாளர்.
யாழ்ப்பாண மாவட்டக் கூட்டுறவு சபை,
யாழ்ப்பாணம்.
17-05-94

(சி-8170)

கண்ணீர் அஞ்சலி

மறைந்த மதுவரி அத்தியட்சகர்

அ இ. ஜெயசிங்கம்

அவர்களுக்கு எமது கண்ணீர் அஞ்சலியைச் செலுத்துகின்றோம்.

அன்னாரது பிரிவால் துயருறும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

அன்னாரது ஆன்மா சாந்தியடைவதாக!

வடமாகாண
மதுவரி உத்தியோகத்தர்களும்
ஊழியர்களும்
உத்தியோகத்தர்களும்

[30939]

வளலாயில் குண்டுச் சத்தங்கள்!

வல்வெட்டித்துறை, மே 18

வளலாயில் இராணுவ ஆக்கிரமிப்புப் பகுதியில் நேற்று முன்தினம் நண்பகலுக்குப் பின்னர் மாலை வரை குண்டுச் சத்தங்கள் கேட்டபடி இருந்தன.

அந்தப் பகுதியில் கரும்புகை மேலெழும்பிச் சென்றதையும் அவதானிக்க முடிந்ததாக தெரிவிக்கப்பட்டது.

இராணுவத்தினர் பொதுமக்களின் வீடுகளை குண்டு வைத்துத் தகர்த்திருக்கலாம் என நம்பப்படுகிறது.

நேற்றுக் காலை 6 மணியளவிலும் வளலாய்ப் பகுதியில் பெரும் குண்டுச் சத்தங்கள் கேட்டன. (ஓ-155)

விளையாட்டு நிகழ்வுகள்

யாழ். ஜங்கரன் விளையாட்டுக்கழகம் ஆஸ்பத்திரி வீதியில் உள்ள கழக மைதானத்தில் நடத்திவரும் சுற்றுப்போட்டிகளில் இன்று நடைபெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகள் வருமாறு:-

மென்பந்து கிரிக்கெட்

★ 4. 00 மணி:- நிலாவெளி வி. க. அணி எதிர் அரியாலை வி. க. அணி

கரப்பந்தாட்டம் (ஒவர்)

★ 4. 00 மணி:- அம்பாள் வி. க. ''பி'' அணி எதிர் நல்லூர் வி. க. அணி

* * *

பி. விபுலானந்தன் கிண்ணத்துக்கான யாழ் சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழகம் யாழ். பல்கலைக் கழக ஆடுகளத்தில் நடத்தி வரும் கூடைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று மாலை நடைபெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகள் வருமாறு:-

★ 3 30 மணி:- சென்றலைட்ஸ் சொக்ஸ் அணி எதிர் ஜொனியன்ஸ் கறுப்பு அணி

★ 4, 30 மணி:- ஒல்ட் கோல்ட்ஸ் அணி எதிர் சென்றலைட்ஸ் நீல அணி

★ ★ ★

அளவெட்டி விநாயகர் விளையாட்டுக் கழகம் இணுவிலில் உள்ள மகாஜனக் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடத்திவரும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டிகளின் இன்று மாலை நடைபெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் கழக அணிகள் வருமாறு:-

★ 3. 00 மணி:- கொய்யாத்தோட்டம் ஐ.வி.க. எதிர் யங் ஹென்றீஸ் வி. க.

★ 4. 00மணி:- யங்றோயல் வி. க. எதிர் றோயல் வி. க.

(உ-20)

வலைப்பந்தாட்டம்

தென்மராட்சி, மே 18

தென்மராட்சி கல்விக் கோட்டப் பாடசாலைகளுக்கு இடையிலான 17 வயது 19 வயது பிரிவுகளுக்கான வலைப்பந்தாட்டப் போட்டியின் இறுதிப் போட்டிகள் நாளை வியாழன் சாவகச்சேரி மகளிர் கல்லூரி மைதானத்தில் நடைபெறும். (ஓ-117)

ஆலயங்களில்

மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயத்தில் பாலஸ்தாபன கும்பாபிஷேகம் எதிர்வரும் 23ஆம் திகதி திங்கட்கிழமை பகல் 10 மணி முதல் 11 மணி வரையுள்ள சுப முகூர்த்தத்தில் நடைபெறும். (ஏ)

* * *

யாழ்ப்பாணம், மே 18

வண்ணை ஸ்ரீ வீரமாகாளி அம்மன் ஆலயத்தில் நாளை வியாழக்கிழமை பூர உற்சவம் நடைபெறும். மாலை 5 மணிக்கு வசந்த மண்டப பூசையும், ஆராத்தியும் இடம் பெற்று அம்பாள் வீதிவலம் வருவார். (ஏ)

புதினம்

'வரதர்'' எழுதும்
பாட்டுக்கதை
ஆரம்பம்
நிலவண்ணனின்
''இறுதியாத்திரை''
தொடர்சித்திரம்
மற்றும் பல

15-05 1994 இதழ் விற்பனையாகிறது.

[சி/8216]

யாழ்.

றோட்டறிக் கழகம்

இலவச கண் சத்திரசிகிச்சை முகாம்-2

''கற்றக்'' நோயினால் பீடிக்கப்பட்டவர்களுக்கான சத்திரசிகிச்சைக்கான நோயாளர்களைத் தெரிவு செய்யும் ஆரம்பப் பரிசோதனை

இடம்:- கோப்பாய் அரசினர் வைத்தியசாலை
காலம்:- 22-05 94 ஞாயிறு காலை 7. 00 மணி

தலைவர்
யாழ் றோட்டறிக் கழகம்

(சி-8174)

தமிழீழ காவல்துறை

பதவி வெற்றிடங்கள்

உப பரிசோதகர் / காவலர் தரங்கள்

கல்வித் தகைமைகள்:- 8ஆம் வகுப்பு தொடக்கம் க. பொ. த. (உயர்தரம்) வரை
உயரம்:- 5' 6"
வயது:- 18 தொடக்கம் 30 வரை

மேற்கூறிய தகைமையுடையவர்கள் சான்றிதழ்களுடன் 25 - 05 - 94 ஆம் திகதி வரை பழைய பூங்காவிலுள்ள காவல் துறை அலுவலகத்திற்கு நேரடியாகச் சமுகம் தரவும். தபால் மூல விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா. ஆண் / பெண் இரு பாலரும் விண்ணப்பிக்கலாம்.

இதுவரை விண்ணப்பித்து நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படாதவர்களும், நேர்முகத் தேர்வின் இறுதித் தேர்விற்கு அழைக்கப்படாதவர்களும், உடனடியாகச் சமுகம் தரவும்,

பா. நடேசன்
பொறுப்பாளர்,
தமிழீழ காவல்துறை,
தமிழீழம்.

நடுவப் பணியகம்,
தமிழீழ காவல் துறை.
தமிழீழம்.
17 - 05 - 94.

(சி-8172)

கேள்வி அறிவித்தல்

வடக்கு - கிழக்கு மாகாணசபை, நிர்மாணத் திணைக்களம்

கீழ்வரும் வேலைக்கான கேள்விகள் யாழ்ப்பாணம், கடற்கரை வீதியில் அமைந்துள்ள நிர்மாணத்திணைக்கள பிரதம பொறியியலாளரினால் 1994ஆம் ஆண்டு ஜூன் மாதம் 1ஆம் திகதி முற்பகல் 10-00 மணி வரை ஏற்றுக் கொள்ளப்படும்.

வேலையின் விவரம்:

1. யாழ்ப்பாண செயலக கட்டட திருத்தவேலை இரண்டாம் கட்டம் 'B'
2. ரூபா 10லட்சத்திற்கு (10 00 000) அல்லது அதற்கு மேற்பட்ட தொகைக்கு கட்டடங்கள்/நிர்மாணத்திணைக்களத்தில் அல்லது ICTAD ஸ்தாபனத்தில் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்கள் இக் கேள்விகளுக்கு விண்ணப்பிக்க தகுதியுடையோராவர்.
3. மேற்படி கேள்விப் பத்திரங்களை 1994ஆம் ஆண்டு மே மாதம் 27ஆம் திகதி நண்பகல் 12 00 மணிவரை நிறைவேற்று பொறியியலாளர் அலுவலகம் நிர்மாணத் திணைக்களம், கடற்கரை வீதி, யாழ்ப்பாணத்தில் பெற்றுக் கொள்ளலாம். கேள்வி வைப்புக்கு சமர்ப்பிக்க வேண்டிய கீழ்க்கண்ட வைப்புப் பணத்தை ஏதாவதொரு கச்சேரியில் அல்லது நிர்மாணத்திணைக்களம் நிறைவேற்று பொறியியலாளர், கடற்கரை வீதி, யாழ்ப்பாண அலுவலகத்தில் வைப்புச் செய்து கொள்ளலாம்

வேலையின் விவரம்	மீளளிக்கப்படாத பணம்	மீளளிக்கப்படும் வைப்புப் பணம்
யாழ்ப்பாண செயலக கட்டட திருத்தவேலை இரண்டாம் கட்டம் 'B'	500/-	3,200/-

கேள்வி ஆவணங்களை இலவசமாக பரீட்சிக்க முடியும். அத்துடன் விபரங்களை நிறைவேற்று பொறியியலாளரிடம் இருந்து காரியாலய நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

சு. சுந்தரகுமார்
பதில் பிரதம பொறியியலாளர்,
நிர்மாணத்திணைக்களம், வடமாகாணம்.

நிர்மாணத்திணைக்களம்,
கடற்கரை வீதி, யாழ்ப்பாணம்.

[சி-8168]

புக்காரா நோட்டம்

புக்காரா விமானம் ஒன்று நேற்றுக் காலை பருத்தித்துறை, வல்வெட்டித்துறை கரையோரப் பகுதிகளுக்கு மேலாக வட்டமிட்டு நோட்டமிட்டது.

நேற்று முன்தினம் திங்கட்கிழமையும் புக்காரா விமானம் மிகத் தாழப்பறந்து கீரிமலை, வலிகாமம், வலிபுரம் பகுதிகளை பலமுறை வட்டமிட்டுச் சென்றது. (ஓ-173)

கண்ணீர் அஞ்சலி

கொக்குவில் கற்புலத்து மனோன்மணி அம்பாள் இந்துசமய அபிவிருத்திச் சபையின் மூத்த உறுப்பினர் திரு. சி. மாதவகுமாரன் B Sc ஆசிரியர் அவர்களின் தாயார்

கண்மணி சின்னத்துரை

அவர்களுக்கு எமது கண்ணீர் அஞ்சலிகள்

நிர்வாகசபை

கொ. க ம. அ. இந்துசமய-
அபிவிருத்திச் சங்கம்,
கொக்குவில்.

(7392)

எம் இதய அஞ்சலிகள்

94 ஆம் ஆண்டு உயிரியல் பிரிவு மாணவனாகிய க சிறீசங்கரின் தந்தை ஆகிய

Dr. K. கதிரவேல்

(வசந்தா வைத்தியசாலை)

அவர்களின் மறைவால் நாம் ஆழ்ந்த துயரும் அதிர்ச்சியும் அடைந்துள்ளோம். அன்னாரின் குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறுவதுடன், அன்னாரின் ஆத்மசாந்திக்காக எமது கல்லூரி சார்பாகவும் 94 ஆம் ஆண்டு உயிரியல் பிரிவு மாணவர்கள் சார்பாகவும் இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

உயிரியல் பிரிவு மாணவர்கள்
யாழ் - யூனியன் கல்லூரி (94 ஆம் ஆண்டு)
தெல்லிப்பளை.

(2091)

மரண அறிவித்தல்கள்

அருட்சகோதரி றோஸ் லீமா (தி.கு.)

சில்லாலையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், திருக்குடும்ப சபையைச் சேர்ந்தவருமான அருட்செல்வி றோஸ் லீமா அவர்கள் நேற்று (செவ்வாய்க்கிழமை) யாழ். திருக்குடும்ப கன்னியர் மடத்தில் காலமாகி விட்டார்.

அன்னாரின் இறுதிச் சடங்கு இன்று (18-05-94) புதன்கிழமை பிற்பகல் 4. 00 மணிக்கு யாழ். திருக்குடும்ப கன்னியர் மடத்தில் திருப்பலியுடன் இடம் பெறும்.

தகவல்;
மாகாணத் தலைவி

மாகாண இல்லம்,
யாழ்ப்பாணம்.

[30945]

அந்தோனிப்பிள்ளை இமானுவல் ஜெயசிங்கம்

(மதுவரி அத்தியட்சகர்)

ஈச்சமோட்டையைப் பிறப்பிடமாகவும், கரவெட்டியில் வசித்தவருமான அந்தோனிப்பிள்ளை இமானுவல் ஜெயசிங்கம் (மதுவரி அத்தியட்சகர்) 15 - 05 - 94 இல் காலமானார்.

இவர் எலிசபேத் ஆனந்தராணியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற டேவிட் தம்பிராசா, திருமதி செல்வராணி தம்பிராசா ஆகியோரின் அருமைப் புதல்வரும், ஜயசிங்கம், விஜயராணி, ஜெசிந்தா - நிம்மி, ரூபசிங்கம், றஞ்சிதம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், D A. M. குணசிங்கத்தின் மருமகனும், கரவெட்டியைச் சேர்ந்த காலஞ்சென்ற இராசப்பு தம்பதிகளின் அன்பு மருமகனும், கனகராஜா, ஆனந்தராஜா, அருட் சகோதரி புஷ்பராணி (A.C) (கார்மல் மடம், கல்முனை) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் கரவெட்டியில் உள்ள அவரது இல்லத்திலிருந்து இன்று (18 - 05 - 1994) புதன்கிழமை முற்பகல் 10-00 மணிக்கு எடுத்துச் செல்லப்பட்டு 11/1, ஈச்சமோட்டை வீதி, யாழ்ப்பாணத்திலுள்ள வீட்டில் வைக்கப்பட்டு புனித கொஞ்சேஞ்சி மாதா ஆலயத்தில் பிற்பகல் 4-00 மணிக்கு திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்ட பின் புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்

இதனை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும் படி கேட்டுக் கொள்கிறோம்.

தகவல்:
T. P. விஜயசிங்கம்.
(சகோதரன்)

11/1, ஈச்சமோட்டை வீதி,
யாழ்ப்பாணம்.

[30938]

தம்பாபிள்ளை - சோமசுந்தரம்

(இணுவில் கிழக்கு)

இணுவில் கிழக்கைப் பிறப்பிடமாகக் கொண்ட த. சோமசுந்தரம் 14 - 5 - 1994 இல் கொழும்பில் காலமானார்.

அன்னார் யோகம்மாவின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற இரத்தினசபாபதி, வைரவநாதன் (நீர்ப்பாசன இலாகா கொழும்பு) ஆகியோரின் அன்புச் சகோதரனும், இந்திராணி, லோகேந்திரன் (நீர்ப்பாசன இலாகா முருங்கன்), கமலபூபதி, தெய்வேந்திரன் (பிரதேச செயலகம் உடுவில்), இந்திரலீலா, வசந்தகுமாரி (ஜேர்மன்) ஆகியோரின் அன்புத் தந்தையும், செல்வரத்தினம் (இணுவில் மத்திய கல்லூரி), நாகேஸ்வரி, மங்களேஸ்வரன், கமலரஞ்சினி இரத்தினேஸ்வரன், கருணாதேவன் (ஜேர்மன்) யோகராணி ஆகியோரின் அன்பு மாமனாரும், விசாகன், சுகிதா, கவிதா, தர்ஷிகா, சுபா சதீஸ், தயாசங்கர், யாழினி, மயூரி, சோபிகா, சுஜாந்தன், சிந்துஜன், திருப்பரன், வதனி, வனி, குமணன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 19 - 5 - 94 வியாழக்கிழமை பகல் 12 மணிக்கு கே. கே. எஸ் வீதி இணுவில் ஸ்ரீரங்கம் இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரியை காரைக்கால் மயானத்தில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
சோ. தெய்வேந்திரன்

இணுவில் கிழக்கு.

(30941)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி. 292/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 18 - 05 - 1994 இல் அச்சிட்டு வெளியிடப் பெற்றது.